[1972 டிசம்பர் 6

வெளிநாட்டு உடனுழைப்புடன் தொடங்கப்பட்ட தொழிலகங்கள்.

* 56 வினா. திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

1971-ம் ஆண்டு, அக்டோபர்-நவம்பர்-டிசம்பர் மாதங்களில் வெளி நாட்டுத் தொழில் நிறுவனங்களுடன் கூட்டுத் தொழில் முயற்சிகள் மேற்கொள்ள தமிழகத்தில் எங்கெங்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : 1971-ஆம் ஆண்டு அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களில் மத்திய அரசு வெளிநாட்டு தொழில் நிறுவனங்களுடன் உடனுழைப்பு பெற ஒரு தமிழக தொழில் நிறுவனத் துக்கு அனுமதியளித்துள்ளது. அந்த தொழில் நிறுவனம் சென்னையில் உள்ளது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, நமது பகுதியில் வெளி நாட்டுத் தொடர்போடு அமைக்கப்படுகிற தொழிற்சாலைகளில் நமது தமிழக அரசுக்குப் பங்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது தனியார் தொழிற்சாலை, ஆவடி யில் கிழக்கு ஜெர்மன் தொழில் நுட்ப உதவியுடன் அனுமதி அளிக்கப் பட்டிருக்கிறது.

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, இப்படி வெளிநாட்டுத் தொடர்புடன் தனியார் நிறுவனங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள். வெளிநாட்டுத் தொடர்புடன் அரசாங்கமே தொழிற் சாலைகள் அமைக்கும் திட்டம் இருக்கிறதா ? அப்படி இருந்தால் அரசாங்கம் என்ன என்ன தொழில்களை ஆரம்பித்திருக்கிறது என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : வெளிநாட்டு பங்கு போட்டு ஆரம்பிக்கிற தொழிற்சாலைகள் இல்லை. அவர்கள் தங்களது தொழில் நுட்ப அறிவை உதவுகிறார்கள். இந்த முறையில் தூத்துக்குடியில் 1971-இல் அரசாங்கத்தரப்பில் ஆரம்பிக்கப்பட்டுள்ள தொழிற்சாலைக்குக் கூட ஜப்பான், பிரிட்டன் போன்ற நாட்டு நிறுவனங்களின் தொழில் நுட்ப உதவியைத் தந்திருக்கிறார்கள். அது போல பல தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டு வருகின்றன.

திரு. செ. கந்தப்பன் : பல நேரங்களில் மத்திய அரசு வெளிநாட்டு நிறுவனங்களின் தொழில் நுட்ப உதவியை நமக்குப் பெற்றுத்தருகிற போது மாநில அரசு, மாநில தொழில் அமைச்சர் ஆகியவர்கள் கலந்து கொள்ளப்படுகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இதுபற்றி மாநில அரசுக்கு மத்திய அரசிடம் குறைதான். இது பற்றி தேசீய அபிவிருத்தி மன்றத்திலும் எடுத்துப் பேசினார்கள். தொழில் நுட்ப உதவி பெற்றுத் தருவதில் மிகுந்த காலதாமதம் செய்யப்படுகிறது. தமிழ்நாட்டுக்கு அளிக்கப்பட்ட டயர் தொழிற்சாலையை எடுத்துக்கொள்ளுங்கள். பல ஆண்டு

1972 டிசம்பர் 6]

தொழில் நுட்ப உதவி பெறுவது தாமதப்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம் மத்திய அரசாக அமைந்திருக்கிறது. ஆகவே இதுபோல அதிக காலதாமதம் ஆகக் கூடாது என்று வலியுறுத்தியிருக்கிறோம். மத்திய அமைச்சரும் பரிசீலிப்பதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Almost all big industries are concentrated in cities like Madras. Government also appear to have been showering all its favours on cities. These cities are developing at the cost of mofussil places having facilities. May I know from the Hon. Minister for Industries whether he would consider the question of taking steps to start industries in mofussil areas having facilities ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சென்னை மாநகரத்தைச் சுற்றி தொழில்கள் வளர்கின்றன என்பது உண்மை. ஆனால், அதற்காக இந்த அரசாங்கம் ஊக்கம் அளிக்கிறது என்று சொன்னது தவறு. காரணம், நம்முடைய அரசாங்கத்தினுடைய கொள்கையே மிகத் தெளிவாக இருக்கிறது. மாநிலத்தின் மற்ற பகுதிகளிலே, அதிலும் குறிப்பாக பின் தங்கிய பகுதிகளிலே தொழில்கள் தொடங்கப்படுமானால், அதற்காக பல் வேறு சலுகைகளை அளித்து வருகிறோம். சென்னை நகரைச் சுற்றியுள்ள பகுதிகளில் புதிய தொழில்களைத் தொடங்கக் கூடாது என்பதுதான் இந்த மாநில அரசினுடைய கருத்தாகும். உள்ளபடியாகப் பார்த்தால், தர்மபுரி மாவட்டம் முழுவதும் பின் தங்கிய பகுதியாக அறிவித்து, அங்கே தொழில்கள் பரவிட வேண்டுமென்று நாம் மத்திய அரசுக்கு ஆலோசனை கூறியுள்ளோம். அவர்களும் ஒத்துக்கொள்கிற வாய்ப்பு இருக்கிறது. ஆனால், தொழில் தொடங்குகிறவர்களுக்கு சென்னையைச் சுற்றிப் பல்வேறு வசதிகள் இருக்கிற காரணத்தினாலே, இங்கே தொடங்குகிற வாய்ப்பு தொடர்ந்து இருப்பது உண்மை.

திரு. எ. சி. நரசிம்மன் : தலைவர் அவர்களே, ஃபாரீன் கொலாபரேஷன்—உடன் ஆரம்பிக்கப்பட்ட மருந்து கம்பெனிகள் தயாரிக்கிற மருந்துகள் விலை, அங்கிருந்து இறக்குமதி செய்வதைக் காட்டிலும் அதிகமாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. தமிழ் நாட்டிலே, அம் மாதிரி அதிகமான விலையில் விற்பதற்கு இந்த அரசு சலுகை செய்திருக்கிறதா ? அப்படி இருந்தால், அந்த விலைகளைக் குறைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மருந்து விலை பற்றி எனக்குத் தெரியாது. ஆனால் பொதுவாக சில பொருள்கள் வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டால் அந்த அளவுக்கு நமக்கு அன்னியச் செலாவணி வீணாகிறது. ஆகவே, விலை குறைவாக இருக்கிறது என்றாலும் அன்னியச் செலாவணி கொள்கையின் அடிப்படையிலே இதை ஏற்றுக் கொள்ள முடியாது. எந்த எந்தப் பொருள்களை நம்முடைய நாட்டிலே உற்பத்தி செய்ய முடிகிறதோ அந்த அளவுக்கு வெளி நாட்டுச் செலாவணி நமக்கு மிச்சப்படுகிறது என்பதைத்தான் கொள்கையாக ஏற்றுக்கொள்ளலாம்.

திரு. கே. எ. வகாப் : அமைச்சர் அவர்கள் சென்னையைச் சுற்றித்தான் தொழில்கள் வளர்வதாகச் சொன்னார்கள். ஆனால், தனியார்கள் அப்படிச் செய்தாலும், அரசாங்கமே, டான்சி போன்ற நிறுவனங்களைக் கொண்டு பின்தங்கிய மாவட்டங்களான தர்மபுரி, வட ஆற்காடு போன்ற மாவட்டங்களில் தொழில்களைத் துவங்குவதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். அத்துடன், இப்பொழுது கிண்டியிலே, மொப் பெட்—சிறிய மோட்டார் சைக்கிள்—தொழிற் சாலையைக் கூட வைத்திருக் கிறார்கள். அது எதிர்காலத்தில் விரிவடைய வசதி இருப்பதால், இராணிப்பேட்டை போன்ற இடங்களுக்கு மாற்றி வைக்க, அரசு டான்சிக்கு இப்படிப்பட்ட யோசனை கூறுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அரசுத் துறையிலே, கூட்டுறவுத் துறையிலே, எந்தத் தொழிலும் சென்னையைச் சுற்றி ஆரம்பிக்கப் படவில்லை. நம்முடைய கொள்கை அப்படித்தான். மொப்பெட் தொழிற்சாலை இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. அதுபோல், பைலட் ஸ்கீம் தொடங்கலாமா என்பது ஆய்வில் இருக்கிறது. இப்பொழுது, மத்திய அரசாங்கத்தினுடைய அனுமதி கிடைத்து, அதைத் தொடங்கு வதற்கு நாம் முன்வருகின்ற நேரத்தில் நிச்சயம் சென்னையைச் சுற்றித் தொடங்கப்படாது.

திரு. சொ. காவேரிமணியம் : இம்மாதிரி வெளிநாட்டினுடைய உதவியின் பேரில், தனியார், துவங்குகிற தொழில்கள், நம்நாட்டில் கிடைக்கிற மூலப் பொருள்களைப் பயன்படுத்துகிறதா அல்லது, வெளி நாட்டிலிருந்து வசூலிக்கப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பொதுவாக எந்தத் தொழிலுக்கு எந்த மூலப்பொருள் என்று கேட்டால்தான் பதில் சொல்ல முடியும். நாப்தா, தூத்துக்குடி உரத் தொழிற்சாலைக்கு தேவைப்படுகிறது. எதற் காவது நமது நாட்டிலே பற்றுக்குறை இருக்குமானால் வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்யவேண்டுமென்று வற்புறுத்தி வருகிறோம்.

திரு. மா. வெ. கரிவேங்கடம் : நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையிலும் ஒழுங்கான முறையிலே கனிவளங்கள் ஆய்வு செய்யப் படவில்லை. கனிவள வல்லுனர்களைக்கொண்டு, என்னென்ன கனிகள் இங்கு கிடைக்கும் என்பதை ஆராய ஒரு குழுவை இந்த அரசு நியமிக் குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தமிழ்நாட்டைப் பொறுத்த அளவுக்கு ஐ.நா. நிறுவனத்தின் மூலமாக ஏராளமான கனிவள ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. ஆனால், தமிழ்நாட்டில் ஏராளமான கனிவளங்கள் இருப்பதாக நாம் நினைத்துக் கொண்டிருப் பதுதான் தவறுபோல் தோன்றுகிறது.

திரு நா.வெ. குருசாமி : தொழில் துறை அமைச்சர் அவர்கள், பின் தங்கிய பகுதிகளில்தான் தொழில்களைத் துவங்குவதாகக் கூறினார்கள். மதுரைப் பகுதியில் நைலான் தொழிற்சாலை ஏற்படுத்தப் போவதாக

1972 டிசம்பர் 6]

அறிகிறேன். வைகைப் பகுதியில் அதை ஏற்படுத்தவேண்டுமென்று அமைச்சர் அவர்களிடம் முன்பே தெரிவித்திருக்கிறேம். அங்குதான் பின்தங்கிய நிலையில் உள்ளவர்கள் இருக்கிறார்கள். ஆகவே, அந்த தொழிற்சாலையை வைகை அணைப் பகுதியில் ஏற்படுத்த அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தொழிற்சாலை வேண்டும், அந்த மாவட்டத்திற்குள்ளும் தன்னுடைய தொகுதிக்கு வேண்டும். இது வெகுவாக எழுப்பப்படுகின்ற கோரிக்கை.

திரு சி.வி.எம். அண்ணாமலை : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்தில் பல தொழிற்சாலைகள் இருக்கின்றன என்று குறிப்பிட்டாலும், அந்தப் பகுதிகளெல்லாம் சென்னையை ஒட்டி யிருப்பது அரசுக்கு நன்கு தெரியும். செங்கற்பட்டுக்கு மேற்குப் பகுதியில் குறிப்பாக செங்கற்பட்டுக்குத் தலைநகரான காஞ்சிபுரத்தில் ஏறக்குறைய 2 லட்சம் மக்கள் பெருக்கம் இருக்கின்ற இடத்தில், பெரும்பாலும் கைத்தறி நெசவுத் தொழில்தான் இருந்து வருகிறது. நெசவாளர்கள்தான் இருந்து வருகிறார்கள். அவர்களால், நெசவுத் தொழிலை நம்பி நல்லமுறையில் வாழ முடியவில்லையென்ற கருத்து நெடுங்காலமாக இருந்து வருகிறது. அன்னியில், பியட் கார் தொழிற்சாலை ஒன்று நிறுவ இருப்பதாகத் தெரிகிறது. அதைக் காஞ்சிபுரத்தில் நிறுவி, இப்பிரச் சினைக்கு தீர்வு காணவேண்டும். (குறுக்கீடு). அங்கு அத் தொழிலை நிறுவ ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. செ.மாதவன் : செங்கற்பட்டு மாவட்டம் முழுவதும் தொழில் வளர்ச்சி நிரம்பியிருக்கிறது என்று நம்முடைய அரசாங்கம் கருதவில்லை. நானும் அப்படிப்பட்ட கருத்தைச் சொல்லவில்லை. சென் னையைச் சுற்றிய செங்கற்பட்டு மாவட்டப் பகுதியில், தொழில் வளர்ச்சி மிகுதியாக இருக்கிறது. சில சமயங்களில், செங்கற்பட்டு மாவட்ட சட்ட மன்ற உறுப்பினர்கள் என்னுடன் பேசும்போது, இந்தப் பகுதிகளை எல்லாம் பிரித்து, சென்னையோடு சேர்த்து விடுங்கள் ; இப்பொழுது செங்கற்பட்டு பின்தங்கிய பகுதி என்று சொல்லமுடியாத சூழ்நிலை இருக் கிறது என்று சொல்வதையும் பார்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர்கள் கேள்வி கேட்டு, அமைச்சர் அவர்கள் பதில் கொடுப்பதுதான் கேள்வி-பதில். நீங் களே கேட்டு, நீங்களே பதில் கூறுவது கேள்வி பதில் ஆகாது.

திரு. எம். தேவராசன் : தலைவர் அவர்களே, உதகையில் காளான் உற்பத்திசெய்யவும், அதை ஏற்றுமதி செய்யவும் ஒரு தொழிற்சாலை நிறுவப் போவதாகக் கூறப்படுகிறதே, அது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் காளான்பற்றி என்னிடத்தில் தகவல் இல்லை.

திரு. கே. கந்தசாமி : மதுரை மாவட்டத்திலுள்ள எனது உசிலம் பட்டி தொகுதியில் தொழிற்சாலையே இல்லாத காரணத்தினால், அங்கு நூற்பாலையாவது ஏற்படுத்த வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் அங்கு வந்தபோது அவரிடத்தில் தெரிவிக்கப்பட்டது. அமைச்சர் அவர்களும் அதை கவனிப்பதாக உறுதி சொன்னார்கள். வெண்மைப் புரட்சியை அதிகப்படுத்த வேண்டுமென்று கூறியதை ஏற்று நாங்கள் முடித்திருக்கிறோம். வெண்மைப் புரட்சியில் வெற்றிகண்ட, அப்பகுதி மக்களுக்காக அமைச்சர் அவர்கள் கருணை கூர்ந்து நூற்பாலையைக் கொண்டு வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : வெண்மைப் புரட்சி என்பது பருத்தி உற்பத்தி என்று நான் ஊகித்துக்கொள்ளுகின்றேன். ஒரு நூற்பாலைக்குத் தேவையான பருத்தியை சாகுபடி செய்ய போதுமான ஏக்கர் நிலங்களை ஒதுக்க அங்குள்ளவர்கள் முன்வருவார்களானால் அதை ஏற்படுத்தலாம் என்று ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். உறுப்பினர் விவசாயிகளிடத்திலே அப்படிப்பட்ட நிலையினை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாயூரத்திலுள்ள இரயில்வே மேம்பால வேலை.

*57—வினா : திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மாயூரத்தில் நடைபெற்று வரும் இரயில்வே மேம்பாலத் திட்ட வேலையினால் குடியிருப்பு இடங்கள் எவையேனும் பாதிக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், பாதிக்கப்பட்டவர்களுக்கு என்ன மாற்று உதவி செய்யப்பட்டது?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா :

(அ) ஆம். 13 குடியிருப்புகள் பாதிக்கப்படுகின்றன.

(இ) ஆறு குடியிருப்புகளுக்கு மாற்று இடம் கொடுக்கப்படும். ஏழு குடியிருப்புகளுக்கு நஷ்டஈடு கொடுக்கப்படும்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, ஏறத்தாழ ரூ. 45 லட்சம் மதிப்பீட்டில், மாயூரத்திலே அமைக்கப்பட்டு வரும் இந்த மேம்பாலத்திற்கு தேவைப்படுகின்ற இடங்கள், அதாவது குடியிருப்புகளை அப்புறப்படுத்துவதற்காக அங்குள்ள அதிகாரிகள் அதிகமான முயற்சி எடுக்காத காரணத்தினால், 18 மாதத்திற்குள் முடியவேண்டிய அந்த மேம்பால வேலை இப்பொழுது நிறுத்தப்பட்டு இருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அந்த வேலையைத் தொடர்ந்து அங்கே நடத்துவதற்கு அரசாங்கம் ஆவன செய்ய முன்வருமா?

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS